**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk; :- 13 (2018) | nghUspay; I | ,uz;L kzpj;jpahyq;fs; |
|---|---|---|

### பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க**

01. பொருளியல் என்பது ஆய்வு செய்யும் முக்கிய விடயம் எது?
   1. சமூகத்தின் செல்வத்தினதும் வருமானத்தினதும் சமமான பங்கீடு பற்றியதாகும்.
   2. அருமையான வளங்களின் திறமையான பயன்பாடு பற்றியதாகும்.
   3. நிறுவனங்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வது பற்றியதாகும்.
   4. வேலையின்மையையும் வறுமையையும் ஒழிப்பது பற்றியதாகும்.
   5. பொருளாதாரத்தில் மொத்தத்தேசிய உற்பத்தியை அதிகரிப்பது பற்றியதாகும்.

02. பின்வருனவற்றுள் பேரினப் பொருளியல் விடயங்களைத் தெரிவுபடுத்தும் சரியான கூற்று.
   A - சராசரி விலைமட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்கள்.
   B - பணவீக்கத்தின் மீது அரச வரவு செலவுத்திட்டம் ஏற்படுத்தும் விளைவு.
   C - அப்பிளின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்கள்.
   D - மகாவலித்திட்டப் பகுதியிலுள்ள நிலத்தின் ஒரு ஏக்கருக்கான வாடகை.
   E - இலங்கையின் நிலச்சொந்தக்காரர் பெற்ற மொத்த வருமானம்.
   1. ACE  2. BCD  3. ABE  4. ADE  5. BDE

agaram.lk


03. பொருளாதார ரீதியான பிரதிபலனுக்காக ஊழியத்தை நிரம்பல் செய்யத் தயாராகவுள்ள பிரிவினராகக் கருதப்பட முடியாதவர்கள் யார்?
   1. தொழில் வழங்குனர்கள்
   2. தொழிலற்றோர்
   3. சம்பளம் பெறாத குடும்ப ஊழியர்கள்
   4. சுயதொழிலில் ஈடுபடுவோர்
   5. சிரமதான வேலை செய்வோர்.

04. பொருளியலானது கருத்தின் படி நிலையான மூலதனமாகக் கருதக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
   1. மூலதனப் பொருள் இருப்புக்கள்
   2. கம்பனியின் நிலையான சொத்துக்களின் அடிப்படையிலான கூட்டு முறிகள்.
   3. பொறிகளும் இயந்திரங்களும் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் வலுவும்.
   4. தொழிற்சாலையும் அலுவலகக் கட்டிடமும் உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் உபகரணங்களும்.
   5. மேற்கூறியவை அனைத்தும்.

05. பின்வருவனவற்றுள் எது முயற்சியாண்மையின் பணியன்று?
   1. கொள்கை ரீதியான உற்பத்தித் தீர்மானங்களை எடுத்தல்.
   2. நட்ட அச்சங்களைக் காப்புறுதி செய்தல்.
   3. உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.
   4. புத்துருவாக்கில் ஈடுபடல்.
   5. அபாயங்களை ஏற்றல்.

06. அமையச் செலவு பின்வருவனவற்றுள் எதனை உள்ளடக்குவதில்லை?
1. வெளிவாரிச் செலவு.
2. இழக்கப்படும் மிகச்சிறந்த மாற்றுப் பயன்பாடு.
3. இழக்கப்படும் எல்லா மாற்றுப் பயன்பாடுகள்
4. நேர்ச்செலவு
5. உண்மைச் செலவு.

07. தரப்பட்டுள்ள வரைபடம் கைத்தொழில் பொருட்களையும் விவசாயப்பொருட்களையும் உற்பத்தியாக்கும் பொருளாதாரமொன்றின் உற்பத்திச் சாத்திய விளையியாகும். A புள்ளியில் இப்பொருளாதாரத்தின் உற்பத்தியும் B புள்ளியில் பொருளாதாரத்தின் நுகர்வும் காணப்படுமாயின் இது குறிப்பது,




1. கைத்தொழில் பொருட்களில் 50 அலகுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
2. பொருளாதாரத்தில் குறைதொழில் மட்டம் நிலவுகிறது.
3. கைத்தொழில் துறையிலிருந்து விவசாயத்துறைக்கு மாற்றமடைதல்.
4. பொருளாதாரத்தின் உற்பத்தி வளங்கள் குறைவடைதல்.
5. விவசாயத் துறையில் தொழிலாளர் வினைத்திறன் அதிகரித்தல்.

08. ஒரு திட்டமிடப்பட்ட பொருளாதரமொன்றில் “எதனை உற்பத்தி செய்தல்” என்ற பொருளாதாரப் பிரச்சினை தீர்மானிக்கப்படுவது?
1. நுகர்வோரதும் அரசாங்கத்தினதும் கூட்டுத் தீர்மானங்களால்
2. நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களினால்.
3. முயற்சியாளரது சுதந்திரமான தீர்மானத்தினால்.
4. சார்பு இலாபத்தினால்.
5. அரசின் கட்டளையினால் ஆகும்.

agaram.lk

09. சந்தைப் பொருளாதாரமொன்றில் “விலைப்பொறிமுறை” ஒன்றினால் சாதிக்க முடியாதிருப்பது பின்வருவனவற்றுள் எது?
1. கேள்வியிலான மாற்றங்களுக்கேற்ப நிரம்பலைச் சரிப்படுத்தல்.
2. நுகர்வோர் நாட்டங்களிலான மாற்றங்கள் குறித்து சைகை காட்டுதல்.
3. மிகையான கேள்வியையும் மிகையான நிரம்பலையும் தவிர்த்தல்.
4. சகல வகையான பண்டங்களினதும் நியாயமான பங்கீட்டை உறுதிப்படுத்தல்.
5. வரையறைக்குட்பட்ட வளங்களை மாற்றுபயோகங்களுக்குப் பங்கீடு செய்தல்.

10. ஒரு உற்பத்திக் காரணியின் நிரம் நெகிழ்ச்சி பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்குமாயின் அதனது சம்பாத்தியத்தில் உள்ளடங்கியிருப்பது.
1. அனைத்தும் பொருளாதார வாடகையாகும்.
2. பெருமளவு மாற்றல் சம்பாத்தியமாகும்.
3. பொருளாதார வாடகையும் மாற்றல் சம்பாத்தியமும் சம அளவில் காணப்படும்.
4. அனைத்தும் மாற்றல் சம்பாத்தியமாகும்.
5. அனைத்தும் போலி வாடகையாகும்.

11. “கையடக்கத் தொலைபேசியின் விலை அதிகரித்தல் தொலைபேசி தொடர்புகளுக்கான கேள்வியைக் குறைக்கும்”. இதில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணி யாது?
1. அழைப்புக் கட்டணம் உயருதல்.
2. தொலைபேசி இணைப்புக் கட்டணம் உயருதல்.
3. தொலைபேசி இழிவுப் பண்டமாகக் கருதப்படல்.
4. பதிலீட்டு விளைவை விட வருமான விளைவு மேலோங்குதல்.
5. குறிப்பிட்ட பொருளோடு ஒப்பிடும் போது தொலைபேசி இணைப்புப் பண்டமாகக் கருதப்படல்.

12. $X$ என்னும் பண்டத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி $-0.5$ ஆகும். கேள்வித்தொகை 20% தால் அதிகரிக்குமாயின் $X$ பண்டத்தின் விலை.

1. 30% தினால் வீழ்ச்சியடையும்.
2. 40% தினால் அதிகரிக்கும்
3. 20% தினால் அதிகரிக்கும்
4. 40% தினால் வீழ்ச்சியடையும்.
5. 50% தினால் வீழ்ச்சியடையும்.

13. $Qd = 1000 - 10P$ இங்கு $50/=$ விலையில் விலைசார்கேள்வி நெகிழ்ச்சி.


1. ஒன்றை விடக் கூடியது.
2. ஒன்றை விடக் குறைவு
3. ஒன்றுக்குச் சமனானது
4. பூச்சியம்.
5. முடிவிலி

14. பின்வருவனவற்றுள் கேள்விக்கோட்டில் அசைவினை ஏற்படுத்தாத காரணியாக அமைவது,

1. குறிப்பிட்ட பொருளின்ன விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.
2. குறிப்பிட்ட பொருளின் சுவை குறைவடைதல்.
3. குறிப்பிட்ட பண்டம் தொடர்பாக நுகர்வோர் வருமானம் குறைவடைதல்.
4. நாட்டின் மின் கட்டணம் உயர்வடைதல்.
5. பதிலீட்டுப் பண்டத்தின் விலை வீழ்ச்சியடைதல்.

15. குறிப்பிட்ட பண்டம் தொடர்பாக கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வருமாறு காட்டப்படுகின்றன.


வரைபடத்தின் படி சமநிலைத் தொகை $Q_0$ விலிருந்து $Q_1$ ஆக வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் யாது?




| | |
|---|---|
| 1. உற்பத்தியாளருக்கு மாணியம் வழங்கப்படல். | நுகர்வோர் வரி விதிக்கப்படல் |
| 2. மூலப்பொருட்களின் விலை அதிகரித்தமை. | இணைப்புப் பண்டங்களின் விலை குறைவடைந்தமை. |
| 3. தொழில் நுட்பமுன்னேற்றம் ஏற்பட்டமை. | பதிலீட்டுப் பண்டங்களின் விலை அதிகரித்தமை. |
| 4. உற்பத்தியாளர் வரி விதிக்கப்படல் | பதிலீட்டுப் பண்டங்களின் விலை வீழ்ச்சியடைதல். |
| 5. மூலப்பொருட்களின் விலை குறைவடைதல். | நுகர்வோர் சுவையில் வீழ்ச்சி ஏற்படல். |

agaram.lk

16. குறிப்பிட்ட பொருளொன்றின் மீது உத்தாவாத விலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. வரைபடத்தின் படி உற்பத்தியாளருக்கு நிரப்புக் கொடுப்பனவு ஒன்றை செய்யும் பொருட்டு அரசாங்கம் ஏற்க வேண்டிய செலவு யாது?




1. ரூபா 2250
2. ரூபா 1000
3. ரூபா 1500
4. ரூபா 750
5. ரூபா 2000

17. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது *X* என்ற பண்டத்தின் கேள்வி நிரம்பலினைப் புலப்படுத்துகின்றது.

| பண்டம் X இன் விலை (ரூபா) (வரிக்கு முன்) | கேள்வித் தொகை (அலகுகள்) | நிரம்பல் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 2 | 200 | 140 |
| 4 | 190 | 160 |
| 6 | 180 | 180 |
| 8 | 170 | 200 |
| 10 | 160 | 220 |

அலகு வரியாக அரசு ரூபா 3 இனை அறிமுகப்படுத்துமாயின் நுகர்வோன் தாங்கும் வரி யாது?

1. ரூபா 2  2. ரூபா 4  3. ரூபா 1  4. ரூபா 1.50  5. ரூபா 2.50

18. குறித்த ஒரு சந்தையில் *X* என்ற பண்டத்தின் சமநிலை விலை 20 ரூபாவாகவும் சமநிலைத் தொகை 1000 அலகுகளாகவும் காணப்பட்டது. அப்புள்ளியில் கேள்வி நெகிழ்ச்சி $-2$ ஆகவும் காணப்பட்டது எனின் சந்தையில் கேள்வியின் உயர்ந்தபட்ச விலை யாது?


1. ரூபா 40  2. ரூபா 10  3. ரூபா 15  4. ரூபா 20  5. ரூபா 30

19. விலைக்கேள்வி நெகிழ்ச்சியற்ற உற்பத்திப் பொருளின் மீது அலகு வரி விதிக்கப்படுமாயின் பின்வருவனவற்றில் எவ்விதம் விலை, தொகை மற்றும் நுகர்வோன் செலவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

| விலை | தொகை | நுகர்வோன் செலவு |
|---|---|---|
| 1. குறையும் | குறையும் | குறையும் |
| 2. அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 3. அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| 4. அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| 5. குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும். |

20. கீழே தரப்படும் வரைபடமானது போட்டிச் சந்தையொன்றில் ஆடைகளுக்கான ஏற்றுமதி விலையைக் காட்டுகின்றது. உலக விலையில் இப்பண்டம் ஏற்றுமதி செய்யப்படும் போது ஏற்படக்கூடிய பொருளாதார மிகை அதிகரிப்பு யாது?

1. ரூபா 2400
2. ரூபா 3000
3. ரூபா 3200
4. ரூபா 3500
5. ரூபா 8000




agaram.lk


21. பின்வரும் அட்டவணை நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் சராசரிச் செலவு மற்றும் எல்லைச் செலவுகளைக் காட்டுகின்றது.

| வெளியீடு (அலகு) | சராசரிச் செலவு | எல்லைச் செலவு |
|---|---|---|
| 1 | 150. 0 | 50 |
| 2 | 90. 0 | 30 |
| 3 | 66. 6 | 20 |
| 4 | 57. 4 | 30 |
| 5 | 56. 0 | 50 |
| 6 | 60. 0 | 80 |

4 அலகுகளை உற்பத்தி செய்வதற்கான சராசரி மாறும் செலவு யாது?
1. ரூபா 46 2. ரூபா 45 3. ரூபா 40 4. ரூபா 36 5. ரூபா 20

22. ஒரு நிலையான உள்ளீட்டின் விலையில் ஏற்படும் அதிகரிப்பின் காரணமாக ஒரு நிறுவனத்தினுடைய,
1. சராசரி மாறும் செலவு வளையி மேல் நோக்கி நகரும்.
2. சராசரி மொத்தச் செலவு வளையி மேல் நோக்கி நகரும்.
3. சராசரி மொத்தச் செலவு வளையி கீழ் நோக்கி நகரும்.
4. எல்லைச் செலவு வளையி மேல் நோக்கி நகரும்.
5. எல்லைச் செலவு வளையி கீழ் நோக்கி நகரும்.

23. பின்வரும் வரைபடம் நிறுவனமொன்றின் குறுங்காலச் செலவுக் கோடுகளைக் காட்டுகின்றன. வரைபடத்தின் 1000 அலகு வெளியீட்டு மட்டத்தில் நிறுவனத்தின் மொத்த நிலையான செலவின் அளவு யாது?
1. ரூபா 15000 2. ரூபா 20000 3. ரூபா 5000
4. ரூபா 10000 5. ரூபா 12000




24. நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறுவனம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது என நீர் எதனைக் கருதுவீர்?
1. நிறுவனம் சந்தையின் விலையினை ஏற்றுத் தொழிற்படும்.
2. நிறுவனத்தின் நிரம்பல் கோடு ஆகக்குறைந்த சராசரி மாறும் செலவுக்கோட்டுக்கு மேற்பட்ட எல்லைச் செலவுக்கோடாகும்.
3. நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் புள்ளிகளில் நட்டம் உழைக்கும் சாத்தியமும் உண்டு.
4. நிறுவனத்தின் கேள்விக்கோடு முற்றாக நெகிழ்ச்சியற்றது.
5. நிறுவனத்தின் எல்லை வருமானக்கோடு கிடையச்சுக்கு சமாந்தரமான நேர்கோடாக இருக்கும்.

25. குறுங்கால உற்பத்தி நிறுவனமொன்று ஓரலகு வெளியீட்டிற்காக அதிதாழ்ந்த சராசரிச் செலவில் உற்பத்தியை மேற்கொள்ளும் போது வெளியீட்டில் ஏற்படும் சிறியதொரு வீழ்ச்சியானது நிறுவனத்தின் எல்லைச் செலவு, சராசரிச் செலவு மற்றும் மொத்தச் செலவுகளில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும்?

| எல்லைச் செலவு | சராசரிச் செலவு | மொத்தச் செலவு |
|---|---|---|
| 1. வீழ்ச்சி | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 2. அதிகரிக்கும் | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 3. வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 4. அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 5. வீழ்ச்சி | வீழ்ச்சி | அதிகரிப்பு |

agaram.lk

26. நிலையான அளவுத்திட்ட விளைவுகள் என்பதானல் கருதப்படுவது எல்லா உள்ளீடுகளும் அதிகரிக்கும் போது,

1. மொத்த வெளியீடுகள் தொடர்ந்தும் நிலையாக இருப்பதாகும்.
2. சராசரி மொத்த செலவு நிலையாக இருப்பதாகும்.
3. உள்ளீடுகள் அதிகரிக்கும் அதே வீதத்தில் சராசரி மொத்தச் செலவு அதிகரிப்பதாகும்.
4. நீண்டகாலச் சராசரிச் செலவு தொடர்ந்தும் நிலையாக இருப்பதாகும்.
5. உள்ளீடுகள் அதிகரிக்கும் அதே வீதத்தில் நீண்டகாலச் சராசரிச் செலவு அதிகரிப்பதாகும்.

27. தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் கொள்வனவாளர் விலையினைப் பெற்றுக்கொள்ளும் முறை பின்வருவனவற்றுள் எது?

1. கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை – போக்குவரத்துச் செலவு + வணிக விளிம்பு + நுகர்வோன் செலுத்தவேண்டிய வரிகள்.
2. கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை + போக்குவரத்துச் செலவு + வணிக விளிம்பு + நுகர்வோன் செலுத்தவேண்டிய வரிகள்.
3. கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை + வணிக விளிம்பு + போக்குவரத்துச் செலவு – நுகர்வோன் செலுத்தவேண்டிய வரிகள்.
4. கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை + நுகர்வோன் செலுத்தவேண்டிய வரிகள் – போக்குவரத்துச் செலவு – வணிக விளிம்பு.
5. கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை – வணிக விளிம்பு – போக்குவரத்துச் செலவு – நுகர்வோன் செலுத்தவேண்டிய வரிகள்.

28. பொருளாதாரமொன்றின் தேசிய வருமானம் தொடர்பான அட்டவணை பின்வருமாறு,

| வகை | பெறுமதி மில்லியன் ரூபா |
|---|---|
| நுகர்வுச் செலவு | 7000 |
| கையிருப்புமாற்றமும் கழித்தொகுக்கப்பட்ட பெறுமதிகள் நீங்கலான கையகப்படுத்தல். | 1000 |
| ஏற்றுமதி | - 500 |
| முதன்மை வருமானம் | - 3000 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 6000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன வாக்கம் | 3000 |

மேற்படி அட்டவணையின் படி செலவிடக்கூடிய மொத்தத்தேசிய வருமானத்தின் பெறுமதி யாது?

1. 7500 மில்லியன்
2. 10 000 மில்லியன்
3. 13 000 மில்லியன்
4. 13 500 மில்லியன்
5. 12 500 மில்லியன்

agaram.lk

29. வர்த்தகசகடலோட்டமொன்றின் "பின்னடைவுக்" கட்டத்தில் பின்வருவனவற்றில் எது பெரும்பாலும் நிகழக் கூடும்?
   1. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும் அதேவேளை வேலையின்மை உயர்வாக இருக்கும்.
   2. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும் அதேவேளை வேலையின்மை குறைவடையும்.
   3. பொதுவிலை மட்டம் அதிகரிக்கும் அதேவேளை மொத்தக் கேள்வியும் அதிகரிக்கும்.
   4. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் அதேவேளை பணவீக்கம் குறைவடையும்.
   5. பணவீக்கம் அதிகரிக்கும் அதேவேளை மொத்தக் கேள்வியும் அதிகரிக்கும்.

30. அரசதுறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி 5 ஆகும். இப்பொருளாதாரத்தின் முதலீடு 400 மில்லியனால் அதிகரிக்குமாயின் நுகர்வானது எவ்வளவால் அதிகரிக்கும்.
   1. ரூபா 400 மில்லியன்  2. ரூபா 800 மில்லியன்  3. ரூபா 1600 மில்லியன்
   4. ரூபா 1400 மில்லியன்  5. ரூபா 2000 மில்லியன்

31. அரசாங்க நடவடிக்கை இல்லாத மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் $\mathrm{I} = 800$ மில் ரூபாவாகவும் $S = 0.25\,y$ ஆகவும் உள்ள நிலையில் பொருளாதாரம் சமநிலையில் உள்ளதாகக் கருதுக. இந்நிலையில் சமநிலைத்தேசிய வருமானம் $(y)$ நுகர்வு $(c)$ என்பவற்றின் பெறுமதிகள் யாது?
   1. $c = 1800 \;\; y = 2400$  2. $c = 2500 \;\; y = 2800$  3. $c = 600 \;\; y = 3600$
   4. $c = 800 \;\; y = 3400$  5. $c = 2400 \;\; y = 3200$

agaram.lk

32. திறந்த பொருளாதாரமொன்றின் தரவுகள் பின்வருமாறு,
   ஏற்றுமதிகள் $= 300$ மில்லியன் வரிகள் $= 1100$ மில்லியன்
   அரசாங்க செலவீடுகள் $= 1400$ மில்லியன் சேமிப்பு $= 900$ மில்லியன்
   முதலீடுகள் $= 700$ மில்லியன் இப்பொருளாதாரத்தின் இறக்குமதி மட்டம் யாது?
   1. 600 மில்லியன்  2. 700 மில்லியன்  3. 400 மில்லியன்
   4. 1300 மில்லியன்  5. 1100 மில்லியன்

33. எளிய பொருளாதாரம் ஒன்றில் முதலீட்டில் ஏற்படும் 500 மில் ரூபா மாற்றம் சமநிலை வருமானத்தில் 2000 மில் ரூபா மாற்றத்தை ஏற்படுத்துமாயின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது?
   1. $0.25\,y$  2. $0.05\,y$  3. $0.2\,y$  4. $0.8\,y$  5. $0.75\,y$

34. ஒரு அரச துறையுள்ள மூடப்பட்ட பொருளாதாரத்தில் நுகர்வுச் செலவு $(C) = 200 + 0.6\,y$ எனவும் முதலீடு $(I) = 120$ மில் ரூபா அரச செலவு $(G) = 200$ மில் ரூபா, நேர்வரி $(T) = 0.2\,y$ சேமிப்பு $(S) = -200 + 0.25$ எனவும் தரப்படுமாயின் இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டின் பெறுமதி யாது?
   1. 750 மில் ரூபா  2. 1000 மில் ரூபா  3. 1250 மில் ரூபா
   4. 1300 மில் ரூபா  5. 1400 மில் ரூபா

35. அரசதுறை மற்றும் வெளிநாட்டுத்துறை என்பவை இல்லாத பொருளாதாரம் ஒன்றின் நுகர்வுச் சார்பு $C = 200 + 0.8\,y$ ஆகும். சமநிலைத் தேசிய வருமான மட்டம் 1800 மில் ரூபா எனின் திட்டமிடப்பட்ட முதலீட்டுச் செலவு யாது?

1. 180 மில் ரூபா
2. 160 மில் ரூபா
3. 165 மில் ரூபா
4. 200 மில் ரூபா
5. 170 மில் ரூபா

36. நேர்கோட்டு நுகர்வுச் சார்புக்குரிய வளையி சமாந்தரமாக வலது புறம் நோக்கி நகர்வடையுமாயின் பொருத்தமான கூற்று.

1. எல்லை நுகர்வு நாட்டம் குறைவடையும்
2. எல்லை நுகர்வு நாட்டம் அதிகரிக்கும்.
3. முதலீட்டுப் பெருக்கியின் பெறுமானம் அதிகலிக்கும்.
4. சமநிலை வருமானம் அதிகரிக்கும்.
5. தன்னிச்சையான நுகர்வு குறைவடையும்.

37. பேரினப் பொருளாதாரத்தில் சமநிலை வெளியீட்டு மட்டம் $10\,000\,MR$ எனவும் நிறைதொழில் மட்ட உருமானம் $8000\,MR$ எனவும் பெருக்கியின் பெறுமதி 5 எனவும் கருதுக. அவ்வாறாயின் பணச்சுருக்க இடைவெளியின் பெறுமதி யாது?

1. $200\,MR$
2. $2000\,MR$
3. $400\,MR$
4. $1400\,MR$
5. $500\,MR$

agaram.lk

38. பின்வரும் காரணிகளில் எது பிரதானமாக பொருளாதாரமொன்றின் மொத்தக்கேள்வியை அதிகரிக்கச் செய்யும்?

1. அரசாங்க செலவுகள் குறைவடைதல்.
2. வட்டி வீதங்கள் அதிகரித்தல்
3. வட்டி வீதங்கள் குறைவடைதல்
4. வரவு செலவுத்திட்ட மிகை அதிகரித்தல்
5. வருமானவரி அதிகரித்தல்

39. "பணத்திற்கான கேள்வி" என்பதைக் குறிக்கும் சரியான கூற்று எது?

1. குறிப்பிட்ட விலையில் பணத்துக்கான நிரம்பலைக் குறிக்கும்.
2. மக்கள் தமது கரங்களில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவினைக் குறிக்கும்.
3. மத்தியவங்கியின் பணவெளியீட்டினைக் குறிக்கும்.
4. சுற்றோட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணத்தின் அளவைக் குறிக்கும்.
5. பணத்தைப் பணமாக வைத்திருப்பதனால் கிடைக்கும் நன்மையைக் குறிக்கும்.

40. "பனவீக்கவீதம்" என்பதனால் கருதப்படுவது யாது?

1. நாட்டின் சராசரி பொது விலைமட்டம் தொடர்ச்சியாக நீண்ட காலத்தில் அதிகரித்தல்.
2. நாட்டின் மொத்தக்கேள்வித்தூண்டல் அதிகரிப்பு வீதத்தைக் குறிக்கும்.
3. நாட்டின் மொத்த செலவுத்தூண்டல் வீதாசாரத்தைக் குறிக்கும்
4. ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைச்சுட்டெண்ணின் அதிகரிப்பு வீதத்தைக் குறிக்கும்.
5. பொருளாதார வீழ்ச்சி வீதத்தைக் குறிக்கும்.

41. சில்லறை விலைச்சுட்டெண்ணின் நிறைகள் சுட்டிக்காட்டுவது,
   1. விலைகளிலான பருவகால தளம்பல்களையாகும்.
   2. பொருட்களின் விலைகள் எவ்வளவுக்கு மாறியுள்ளது என்பதையாகும்.
   3. ஒவ்வொரு பண்டவகையின் மீதான சார்பளவிலான செலவீட்டை ஆகும்.
   4. விலைகளின் சராசரி அதிகரிப்பை விட எந்தப் பண்டம் அதிகளவில் அதிகரித்துள்ளது என்பதையாகும்.
   5. பண்டங்கள் ஒவ்வொன்றினதும் சராசரி நிறையினையாகும்.

42. பணச் சந்தையில் திரவப்பற்றாக்குறை நிலவும் போது அதனை நீக்கும் முகமாக மத்தியவங்கி வணிக வங்கிகளுக்கு நிதியைப் பாய்ச்சும் போது அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. துணைநில் வைப்பு வீதம்
   2. வங்கி வீதம்
   3. சட்டரீதியான ஒதுக்கு வீதம்
   4. துணைநில் கடன் வழங்கல் வீதம்
   5. முன்னுரிமை வீதம்

43. மொத்தத்தேசிய உற்பத்தி 500 மில் ரூபாவாகவும் பொது விலை மட்டம் 5 ஆகவும் பண நிரம்பல் மட்டம் 100 மில் ரூபாவாகவும் உள்ள நிலையில் பணத்தின் சுழற்சி வேகம் யாது?
   1. 25 மடங்கு  2. 5 மடங்கு  3. 10 மடங்கு  4. 20 மடங்கு  5. 15 மடங்கு

44. வணிக வங்கிக் கட்டமைப்பு ஒன்று கொண்டுள்ள காசொதுக்கு ரூபா 600 மில்லியன் அக்கட்டமைப்பிலுள்ள வைப்புப் பொறுப்புக்கள் 4000 மில்லியன் ரூபா ஒதுக்கு வீதம் 10% ஆயின் வங்கி அமைப்பக் கொண்டுள்ள மிகை ஒதுக்கின் அளவு யாது?
   இம்மிகை ஒதுக்கினை கடன் வழங்குவதால் உருவாக்கப்படும் கடனாக்க அளவு யாது?

| | மிகை ஒதுக்கு | கடனாக்க அளவு |
|---|---|---|
| 1. | ரூபா 100 மில் | ரூபா 1000 மில் |
| 2. | ரூபா 200 மில் | ரூபா 2000 மில் |
| 3. | ரூபா 300 மில் | ரூபா 3000 மில் |
| 4. | ரூபா 1000 மில் | ரூபா 200 மில் |
| 5. | ரூபா 2000 மில் | ரூபா 100 மில் |

agaram.lk

45. வணிகவங்கியொன்று பணத்தை உருவாக்குவது.
   1. தன்னிடமுள்ள பிணைகளை விற்பனை செய்வதன் மூலமாகும்.
   2. தனது ஒதுக்குகளை அதிகரிப்பதன் மூலமாகும்.
   3. தன்னிடமுள்ள மிகை ஒதுக்குகளைக் கடன் வழங்குவதன் மூலமாகும்.
   4. அதிகளவில் காசோலைகளை அச்சிடுவதன் மூலமாகும்.
   5. தன்னிடமுள்ள ஒதுக்குகளை, ஆவணமாக மாற்றுவதன் மூலமாகும்.

46. ஒரு தூய பொதுப்பண்டமானது கட்டாயமாவே,
   1. அமையச் செலவிலும் குறைந்த விலைகளில் பொதுத்துறையினால் மட்டும் வழங்கப்படுவதாயிருக்கும்.
   2. சந்தை விலையிலும் குறைந்த விலைகளில் தனியார் துறையினால் மட்டும் வழங்கப்படுவதாக இருக்கும்.
   3. சந்தை விலையிலும் குறைந்த விலையில் பொதுத்துறை, தனியார் துறை இரண்டினாலும் வழங்கப்படுவதாயிருக்கும்.
   4. ஒருவரது நுகர்வு மற்றையோரது நுகர்வை எவ்வகையிலும் தடுப்பதாக இல்லாத பண்டமாக இருக்கும்.
   5. உற்பத்தியில் அமையச் செலவு இல்லாத பண்டமாக இருக்கும்.


47. “அரச சேமிப்பு” என்பதனாற் கருதப்படுவது,

1. அரச வருமானத்திலிருந்து அரச செலவைக் கழிப்பதன் மூலம் பெறப்படும்.
2. அரசிறையிலிருந்து மாற்றல் கொடுப்பனவுகளைக் கழித்துப் பெறப்படும்.
3. அரசிறையிலிருந்து மீள்வரும் செலவைக் கழித்துப் பெறப்படும்.
4. வரி அரசிறையிலிருந்து நடைமுறைச் செலவைக் கழித்துப் பெறப்படும்.
5. மொத்த அரச வருமானத்திலிருந்து மொத்தச் செலவைக் கழித்துப் பெறப்படும்.

48. வரிகள் நிலைக்குத்து சமத்துவத்தைப் பேணவேண்டுமாயின்,

1. வரியறுப்பாளர்கள் சகலருக்கும் சமமான வரியினை விதித்தல்.
2. குறித்த வருமான மட்டத்தவருக்கு ஒரே வரி வீதம் விதித்தல்.
3. பொருட்கள் சேவைகள் மீதான வரிகள் சமமான விகிதத்தில் அறவிடுதல்.
4. வரிகள் குறைந்த மட்டத்தில் விதிக்கப்படல்.
5. வெவ்வேறு வருமான மட்டத்திற்கு வெவ்வேறு நேர்வரிகளை விதித்தல்.

49. கீழே தரப்படும் வரைபடமானது ஜப்பான், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் கணணி, தொலைக்காட்சிப் பெட்டி என்பவற்றின் உற்பத்திச் சாத்தியங்களைக் காட்டுகின்றது. (1 அலகு உற்பத்திக்கான ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளின் உற்பத்திச்சாத்திய எல்லை மட்டங்களாகும்). இரு நாடுகளுக்குமிடையிலான வெளிவாரி நன்மைக்கான பரிமாற்று வீதங்கள் எவ்வாறு அமைகின்றன?




agaram.lk

1. ஒரு கணணிக்காக 2 ற்கும் 5ற்கும் இடையிலான அளவு தொலைக்காட்சிப் பெட்டி.
2. ஒரு கணணிக்காக 1 ற்கும் 3 ற்கும் இடையிலான அளவு தொலைக்காட்சிப் பெட்டி.
3. ஒரு கணணிக்காக 0.2 ற்கும் 0.5 ற்கும் இடையிலான அளவு தொலைக்காட்சிப் பெட்டி.’
4. ஒரு கணணிக்காக 50 ற்கு அதிகமான அளவு தொலைக்காட்சிப் பெட்டி.
5. ஒரு கணணிக்காக 20 ற்கும் குறைவான அளவு தொலைக்காட்சிப் பெட்டி.

50. ஒரு நாட்டின் வர்த்தகமாற்றுவீதம் சிறப்படையுமாயின் அந்நாட்டின்.

1. ஏற்றுமதிகளின் அளவைவிட இறக்குமதிகளின் அளவு துரிதமாக வீழ்ச்சியடையும்.
2. இறக்குமதிகளின் பெறுமதியை விட ஏற்றுமதிகளின் பெறுமதி துரிதமாக அதிகரிக்கும்.
3. சென்மதி நிலுவை கட்டாயமாக மேம்படும்.
4. குறித்தளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்தளவு பொருட்களையே ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.
5. சுதேச ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக்கேள்வி அதிகரிக்கும்.

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk; :- 13 (2018) | nghUspay; II | %dW kzpjjpahyqfs |
|---|---|---|

**பகுதி - II**

❖ **உபபிரிவு "அ" உபபிரிவு "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**உபபிரிவு "அ"**

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

*01)*

i. "வளங்களின் அருமைப் பிரச்சினை" என்பதனாற் கருதப்படுவது யாது? இப்பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

ii. "சமூகச் செலவு" என்பது தனியார் செலவுகளையும், வெளிவாரிச் செலவுகளையும் உள்ளடக்கிய ஓர் எண்ணக்கருவாகும். இக்கூற்றினை விளக்குக? (4 புள்ளிகள்)

iii. பின்வரும் எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துக?
அ. பொருளாதார வளங்கள்
ஆ. பொருளாதாரமல்லா வளங்கள்
இ. மீள் உற்பத்தி செய்யக்கூடிய வளங்கள்
உ. மீளுற்பத்தி செய்யமுடியாத வளங்கள் (4 புள்ளிகள்)

iv. "பொருளியல் இலாபம்" "கணக்கியல் இலாபம்" என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

v. முயற்சியாண்மையின் பிரதான தொழிற்பாடுகள் எவை? (4 புள்ளிகள்)

agaram.lk

*02)*

i. எந்தவொரு பொருளாதாரமும் விடை காண வேண்டிய மூன்று முக்கிய வினாக்களும் எவை? ஏன் எல்லாப் பொருளாதாரங்களும் அவற்றை எதிர்நோக்குகின்றன? (4 புள்ளிகள்)

ii. பொருளாதார அமைப்பை வகைப்படுத்தும் முக்கிய நியதிகள் மூன்றும் எவை? (3 புள்ளிகள்)

iii. சந்தைப் பொருளாதாரமொன்றின் குறைபாடுகள் எவை? (3 புள்ளிகள்)

iv. நடைமுறைக்குப் பொருத்தமான உற்பத்திச் சாத்திய வளைகோட்டின் வடிவத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (3 புள்ளிகள்)

v. "நிகழ்காலத்தில் நுகர்வுப் பொருட்கள் மூலதனப் பொருட்களுக்கிடையிலான தெரிவு எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி வேகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்" இக்கூற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

vi. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் குறித்துக் காட்டுக?
அ. பொருளாதாரத் தடை விதிக்கப்படல்.
ஆ. காலநிலைச் சீர்கேட்டினால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படல்.
இ. பொருளாதாரப் பின்னடைவு. (3 புள்ளிகள்)

03)

i. "வருமான விளைவுகள்", "பதிலீட்டு விளைவுகள்" என்பன கேள்வி விதியை நிர்ணயிப்பதில் எவ்வாறு செல்வாக்குடையன? என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் "X" என்னும் பண்டம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

கேள்வியின் விலை நெகிழ்ச்சி :- $-1.6$

கேள்வியின் வருமான நெகிழ்ச்சி :- $-0.6$

$Y$ பண்டத்தின் விலை சார்பாகக் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி :- $-0.4$

அ. $X$ இன் விலை 25 சதவீதம் உயர்வடையுமாயின் அதன் கேள்வித் தொகையில் என்ன மாற்றம் நிகழும்?
அதன் மீதான நுகர்வோர் மொத்த செலவுக்கு என்ன நிகழும்?

ஆ. நுகர்வோரின் வருமானம் 50 சதவீதத்தால் அதிகரிக்குமாயின் அதன் கேள்வியில் என்ன மாற்றம் நிகழும் அது சாதாரண பண்டமா? இழிவுப்பண்டமா?

இ. $Y$ பண்டத்தின் சந்த விலை 25 சதவீதம் வீழ்ச்சியடையுமாயின் $X$ பண்டத்தின் கேள்வியில் என்ன மாற்றம் நிகழும்? $X, Y$ என்பன பதிலுட்டுப் பண்டங்களா? நிரப்பிப் பண்டங்களா? (6 புள்ளிகள்)

iii. பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் கேள்வி நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$$Qd = 400 - 10p \qquad Qs = -200 + 10p$$

அ. சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தையின் சமநிலை விலையையும், சமநிலைத் தொகையையும் காண்க? (2 புள்ளிகள்)

ஆ. பொருளொன்றின் மீது அரசு $10/=$ வினை உற்பத்தி மானியமாக வழங்குமாயின் மானியத்தின் பின் கொள்வனவாளர் செலுத்தும் விலையையும், புதிய சமநிலைத் தொகையையும் தருக? (2 புள்ளிகள்)

இ. மானியத்தின் பின் ஏற்பட்ட பொருளாதார மிகை யாது? (2 புள்ளிகள்)

ஈ. மானியம் வழங்கிய பின் சமூகத்திற்குக் கிடைக்காமல் போகும் மீளமுடியாத இழப்பு யாது? (2 புள்ளிகள்)

உ. அரசு மானியம் வழங்கிய பின் சமநிலை விலையில் கேள்வியின் விலை நெகிழ்ச்சி யாது? (2 புள்ளிகள்)

agaram.lk

04)

i. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. நீண்ட கால உற்பத்திச் செயற்பாட்டின் போது சராசரிச் செலவு வீழ்ச்சியடைவது எக்காரணியினாலாகும்? உமது விடையை விளக்குக? (4 புள்ளிகள்)

iii. குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் எல்லைச் செலவு, எல்லை உற்பத்தி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளிகள்)

iv. தனியுரிமைச் சந்தையில் உள் நுழைவதற்கு தடையை ஏற்படுத்தும் காரணிகள் எவை? (2 புள்ளிகள்)

v. குறுங்காலத்தில் விலையினை ஏற்கும் உற்பத்தி நிறுவனம் ஒன்று 500 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும் அதன் விற்பனை அலகொன்றின் விலை 100 ரூபா எனவும் கருதுக. 500 அலகு வெளியீட்டின் போது சராசரி மொத்தச் செலவு 80 ரூபாவாகவும் சராசரி மாறும் செலவு 60 ரூபாவாகவும் உள்ளன.

அ. குறுங்காலத்தில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அளவு யாது?

ஆ. இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு, மொத்த மாறும் செலவு என்பவற்றின் அளவு யாது? (3 புள்ளிகள்)

இ. நிறைபோட்டி நிறுவனம் ஒன்று விலையை "ஏற்போனாகத்" (Price taker) தொழிற்படுவதற்கான காரணம் யாது? (3 புள்ளிகள்)

05)

i. வர்த்தகசகட ஓட்டத்தின் நான்கு கட்டங்களையும் வரிப்படத்தின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

ii. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு என்றால் என்ன? மொத்த உள்நாட்டுச் சேமிப்பிலிருந்து மொத்தத் தேசிய சேமிப்பு எவ்வாறு பெறப்படுகின்றது? (4 புள்ளிகள்)

iii. பின்வரும் தரவுகள் குறிப்பிட்ட பொருளாதாரமொன்றின் தேசிய வருமானம் தொடர்பானவை ஆகும்.

| வகை | பெறுமதிகள் மில் ரூபா |
|---|---|
| தனியார் நுகர்வு | 15000 |
| அரச கொள்வனவு | 10000 |
| உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 75000 |
| பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி | 10000 |
| பொருட்கள் சேவைகளின் இறக்குமதி | 2000 |
| வெளிநாட்டிலிருந்தா தேறிய முதன்மை வருமானம் | 8000 |
| உலகிலிருந்தான நடைமுறை மாற்றல்கள் | 3000 |
| உலகிற்குச் செலுத்திய நடைமுறை மாற்றல்கள் | 400 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ. சந்தை விலையிலான மொத்த உள்நாட்டுச் செலவு.

ஆ. சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி.

இ. மொத்தத் தேசிய வருமானம்.

ஈ. மொத்தத் தேசிய செலவிடத்தகு வருமானம். (4 புள்ளிகள்)

iv. ஏற்றுமதிகள் இறக்குமதிகள் இல்லாத அரசதுறையுள்ள மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றைக் கருதுக. இப்பொருளாதாரத்தின்

நுகர்வுச் செலவு $c = 300 + 0.8yd$

முதலீடு $I = 200$ மில் ரூபா

வரி $T = 100$ மில் ரூபாவாகவும் உள்ளன.

அ. இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டு மட்டம் யாது? (2 புள்ளிகள்)

ஆ. முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)

இ. முதலீடு 50 மில் ரூபாவால் அதிகரிக்குமாயின் சமநிலை வெளியீட்டு மட்டம் யாது? (2 புள்ளிகள்)

ஈ. நிறைதொழில் மட்ட வருமானம் 3000 மில் ரூபாவாக இருப்பதற்கு அரசாங்க செலவை எவ்வளவால் அதிகரிக்க வேண்டும்? (2 புள்ளிகள்)

## உபபிரிவு “ஆ”
## (இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க)

06)

i. “விலைச்சுட்டெண்” என்றால் என்ன? இலங்கையில் கணிக்கப்படும் விலைச்சுட்டெண்கள் எவை? (4 புள்ளிகள்)



agaram.lk

ii. வெளிப்படையான பணவீக்கம் அடிப்படைப் பணவீக்கம் (மையப் பணவீக்கம்) என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iii. பணவீக்கத்தை ஏற்படுத்தும் கேள்விப்பக்கக் காரணிகளையும் நிரம்பல் பக்கக் காரணிகளையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

iv. பண நிரம்பல் என்றால் என்ன? பண நிரம்பலுக்கும் பண அடித்தளத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குக? (4 புள்ளிகள்)

v. கற்பிதமான பொருளாதாரமொன்றின் பண நிரம்பல் 6000 மில் ரூபா எனவும் வங்கி வைப்புக்கள் 5000 மில் ரூபா எனவும் தேவைப்படும் ஒதுக்கு வீதம் 20 வீதம் எனவும் வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேணவில்லை எனவும் கருதுக.

அ. பணப் பெருக்கியின் பெறுமதி யாது?

ஆ. மத்தியவங்கி 150 மில்லியன் திறைசேரி உண்டியல்களை வணிக வங்கியிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின் புதிய பணநிரம்பல் மட்டம் யாது?

இ. மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய கடன் காரணமாக நாட்டின் பண நிரம்பல் 300 மில்லியனால் அதிகரித்தது எனின் அரசுக்கு வழங்கிய கடன் தொகை யாது?

(4 புள்ளிகள்)

07)

i. 2002ம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச்சட்டத்தின் படி இலங்கை மத்தியவங்கியின் நோக்கங்கள் இரண்டினையும் குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளிகள்)

ii. இலங்கை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதம் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iii. வணிக வங்கிகளின் 1ம் தர ஒதுக்கு 2ம் தர ஒதுக்கு என்பவற்றை உங்கள் மூலம் வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iv. பொருளாதாரமொன்றின் பணக்கையிருப்பின் அளவு ரூபா 2000 ஆகவும் புழக்கச்சுற்றோட்ட வேகம் 5 ஆகவும் மெய் உள்நாட்டு உற்பத்தி 1000 அலகுகளாகவும் இருப்பின் சராசரி விலை மட்டம் அலகொன்றிற்கு எவ்வளவாக இருக்கும்? (2 புள்ளிகள்)

v. வங்கி முறைமையிலுள்ள வணிக வங்கி ஒன்றிடம் காசு ஒதுக்குகள் 400 மில்லியன் ரூபாவாகவும் கடன்கள் 1600 மில் ரூபாவாகவும் வைப்புக்கள் 200 மில் ரூபாவாகவும் உள்ளன. எனக்கருதுக.
வங்கிகள் 8 சதவீத காசொதுக்கினைப் பேணுமாயின் வங்கி வழங்கக்கூடிய உச்சக்கடனின் அளவு யாது? (2 புள்ளிகள்)

vi. வைப்பாக்கப் பெருக்கி என்றால் என்ன? வைப்பாக்கிப் பெருக்கி குறிப்பிடும் அளவுக்கு வைப்புக்களின் உச்ச அதிகரிப்பு இடம் பெறாமைக்காக காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

08)

i. “பண்டமொன்றின் உற்பத்தியில் தனியார் செலவுகளிலும் பார்க்க சமூகச் செலவுகள் குறைவாகவுள்ளது.”

அ. இது எத்தகைய நிலைமையில் காணப்படலாம்? (2 புள்ளிகள்)

ஆ. இத்தகைய ஓர் நிலைமையில் சந்தை முறைமை எங்ஙனம் தொழிற்படும் என்பதை வரிப்படம் ஒன்றை பயன்படுத்தி விளக்குக? (5 புள்ளிகள்)

இ. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சாதன ஒதுக்கீட்டினை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு ஓர் அரசாங்கம் எவ்வழிகளில் தலையீடு செய்யலாம்? (3 புள்ளிகள்)

agaram.lk

ii. "முன்னோக்கிய வரிப்பெயர்ச்சி" "பின்னோக்கிய வரிப் பெயர்ச்சி" என்பவற்றை வேறுபடுத்துக? (2 புள்ளிகள்)

iii. இலங்கை வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைச் செலவு மூலதனச் செலவு என்பவற்றில் உள்ளடங்கும் வகுதிகள் எவை? (4 புள்ளிகள்)

iv. 'வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் காணும் போது வணிகவங்கி, மத்திய வங்கி என்பவற்றிடமிருந்து கடன்களைப் பெறும் போது ஏற்படும் தாக்க விளைவுகள் ஒரே தன்மையானவை' என்ற கூற்றினை ஏற்பீரா? உமது விடைக்கான காரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

09) ஒரு அலகு ஊழியத்தைப் பயன்படுத்தி ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் மேற்கொள்ளக்கூடிய உற்பத்தி அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்டம் | ஐக்கிய அமெரிக்கா | கனடா |
|---|---|---|
| கோதுமை (அலகு) | 08 | 10 |
| புடவை (அலகு) | 04 | 20 |

i. கோதுமை மற்றும் புடவை உற்பத்தியில் முழுநன்மையை எந்தநாடு கொண்டுள்ளது? (2 புள்ளிகள்)

ii. இரு பண்டங்களின் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள நாடுகள் எவை? (2 புள்ளிகள்)

iii. ஒவ்வொரு நாட்டிலும் இடம் பெறக்கூடிய உள்நாட்டு பரிமாற்று விகிதத்தைக் காட்டுக? (2 புள்ளிகள்)

iv. இரண்டு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய இரு நாடுகளுக்குமிடையிலான பரிமாற்று விகிதங்கள் எவை? (4 புள்ளிகள்)

v. சர்வதேச வர்த்தகம் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "பாதுகாப்பு வாதம்" என்பதன் கருத்து யாது? இதனை நடைமுறைப்படுத்த பயன்படுத்தப்படும் கருவிகள் எவை? (4 புள்ளிகள்)

vi. சர்வதேச வர்த்தகம் தொடர்பாகக் "குவித்தல்" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? (2 புள்ளிகள்)

vii. சென்மதி நிலுவையின் 6ம் பதிப்பிற்கமைய முதனிலை வருமானக் கணக்கில் இடம்பெறும் பிரதான இரு கொடுக்கல் வாங்கல்களும் எவை? (2 புள்ளிகள்)

viii. இலங்கையின் பிரதான இடைநிலைப் பண்ட இறக்குமதிகள் நான்கு தருக? (2 புள்ளிகள்)

10)

i. 'பொருளாதார வளர்ச்சி' பொருளாதார வளர்ச்சி வீதம் என்ற எண்ணக்கருக்களை விளக்குக? (4 புள்ளிகள்)

ii. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

iii. பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தருக? (4 புள்ளிகள்)

iv. ஒப்புரவுடன் கூடிய பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன? (4 புள்ளிகள்)

v. பொருளாதார வளர்ச்சியின் போது பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் எவை? (4 புள்ளிகள்)

agaram.lk